# Kanagan Puthinam Velipaduthum Samuga Mathippugal

**Usharani P**
*PhD Research Scholar (Part Time), Assistant Professor, Tamil Department*
*AJK College of Arts and Science, Navakkarai, Coimbatore*

**Dr. M. Jasminepriya**
*Assistant Professor& Head of the Department Tamil*
*AJK College of Arts and Science, Navakkarai, Coimbatore*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2026**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358380

**Abstract**

*In the five-fold classification of land types in Tamil tradition, the Mullai region refers to forests and forest-related areas. The forest is the land of the ancient tribes. The novel 'Kaanagan' unfolds with this forest as its setting. The lifestyle and beliefs of the Paliyar people contribute to the narrative's development. The clan deity of the Paliyar people is Palichiamman. The tiger, a wild animal of the forest, serves as a symbol of Palichiamman's spirit. The belief of the Paliyar tribe that a cub will come in the form of a golden tiger and kill the hunter who killed its mother, forms the central theme of the novel 'Kaanagan'. The bravery and downfall of the hunter Thangappan form the central theme of the novel. The emotional conflict between Thangappan and his adopted son, Vasikkum Puli, strengthens the development of the novel's plot. The novel 'Kaanagan' depicts all the problems faced by forest-dwelling tribal communities due to urbanization. This article aims to compile and present the social values revealed by this novel, 'Kaanagan'.*

***Keywords:*** *Kaanagan, novel, social value, Paliyar, Lakshmi Saravanakumar*

**References**

1. Lakshmi Saravanakumar, Kaanagan, page 358
2. Ibid., page 16
3. Ibid., page 17
4. Ibid., page 17
5. Ibid., page 68
6. Ibid., page 44
7. Ibid., page 147
8. Ibid., page 153

# கானகன் புதினம் வெளிப்படுத்தும் சமூக மதிப்புகள்

***உஷாராணி ப***
முனைவர் பட்ட ஆய்வாளர் (ப.நே)
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஏஜேகே கலை மற்றும் அறிவியல் கல்லூரி
நவக்கரை, கோயம்புத்தூர்

***முனைவர் மா. ஜாஸ்மின் பிரியா***
உதவிப் பேராசிரியர், தலைவர்
தமிழ்த்துறை, ஏஜேகே கலை மற்றும் அறிவியல் கல்லூரி
நவக்கரை, கோயம்புத்தூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழர்களின் ஐந்திணை ஒழுகலாற்றில் முல்லை நிலம், காடும் காடு சார்ந்த பகுதிகளையும் சுட்டுகின்றது. கானகம் தொல்பழங்குடிகளின் நிலமாகும். அத்தகு கானகத்தைக் களமாகக் கொண்டு கானகன் புதினம் விரிகின்றது. பளியர்களின் வாழ்வியல் மற்றும் நம்பிக்கை கதைப்போக்கிற்கு வளர்ச்சியை அளிக்கின்றது. பளியர்களின் குலதெய்வம் பளிச்சியம்மன். கானக விலங்கான புலி பளிச்சியம்மனின் ஆன்மாவின் குறியீடாக அமைகின்றது. பளிச்சி, தாய்ப் புலியைக் கொன்ற தங்கப்பனைக் குட்டிப்புலி வடிவில் வந்து கொல்லும் எனும் பளியர்களின் நம்பிக்கை கானகன் புதினத்தின் மையக்கருவாக அமைகின்றது. தங்கப்பன் எனும் வேட்டைக்காரனின் வீரமும் வீழ்ச்சியும் புதினத்தின் மையப்புள்ளியாக அமைகின்றது. தங்கப்பனுக்கும் அவனது வளர்ப்பு மகன் வாசிக்கும் புலிக்கும் இடையிலான உணர்வுப்போராட்டம் புதினத்தின் வளர்ச்சி நிலைக்கு வலுசேர்க்கின்றது. கானகப் பழங்குடிகள் நகரமயமாதலால் எதிர்கொள்ளும் அனைத்துச் சிக்க ல்களையும் கானகன் புதினமும் காட்சிப்படுத்துகின்றது. அத்தகு கானகன் புதினம் வெளிப்படுத்தும் சமூக மதிப்புகளைத் தொகுத்தளிக்குமாறு இக்கட்டுரை அமையலாகின்றது.*
***திறவுச்சொற்கள்:*** *கானகன், புதினம், சமூக மதிப்பு, பளியர், லஷ்மி சரவணகுமார்*

**முன்னுரை**

லஷ்மி சரவணகுமார் படைத்த கானகன் புதினம் 2015 ஆம் ஆண்டு எழுத்து பிரசுரத்தால் வெளியிடப்பெற்றது. 2016 ஆம் ஆண்டு சாகித்ய அகாதமியின் யுவபுரஸ்கார் விருதினைப் பெற்ற இப்புதினம், The Hutsman என ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. புலி வேட்டையில் தொடங்கி புலியின் வேட்டையில் முடியும் இந்த நாவலில் யானைகளுக்கும் புலிகளுக்கும் நினைவாற்றலும் கூரறிவும் இருப்பதாகச் சித்தரிக்கப்படுவது யதார்த்தமானதாகவே தெரிகின்றது. விலங்குகளை ஈவிரக்கமின்றிக் கொன்று குவிக்கும் தங்கப்பனை சட்டத்தைக் கையில் வைத்திருக்கும் அதிகாரிகளாலோ கையறு நிலையிலுள்ள பழங்குடி மக்களாலோ தண்டிக்க முடியாமல் போனபோது புலி தக்க தண்டனையை வழங்கி விடுகிறது. புலியிடம் நாம் காண்பது வன்மமல்ல. நீதியுணர்ச்சி எனும் எஸ். வி ராஜதுரை அவர்களின் நூல் மதிப்பீடு கானகன் புதின வாசிப்புக்கான நுழைவுச்சீட்டாக அமைகின்றது.

இப்புதினம் பளியர்கள் மற்றும் காட்டின் வாயிலாக சமூகத்துக்கு உயரிய விழுமியங்களை புகட்டுகின்றது. அவற்றைத் தொகுத்தறிதல், கானகன் புதினம் வெளிப்படுத்தும் சமூக மதிப்புகள் எனும் இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

### சமூக மதிப்புகள்

சமூக மதிப்புகள் என்பவை, ஒரு சமூகத்தில் மக்கள் தங்கள் வாழ்வை ஒழுங்கமைக்கவும், ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கவும், பாதுகாப்பாக வாழவும் அடிப்படையாகக் கொள்ளும் பொதுவான நம்பிக்கைகள், நெறிகள், மற்றும் உயர்ந்த பண்புகளின் தொகுப்பாகும். இவை, குறிப்பிட்ட ஒத்த சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்பெறுகின்றன. அத்தகு சமூக மதிப்புகள் சமூகத்தின் ஒழுக்க நெறியாகவும் ஆன்மாகவும் திகழ்கின்றன. சமூகத்தின் இணக்கம் மற்றும் நல்வாழ்வியலுக்கு சமூக மதிப்புகள் வலிமையான துணையாகத் திகழ்கின்றன. கானகன் புதினம் பளியர் சமூகத்திற்கான வாழ்வியல் மதிப்புகளை பரவலாகக் கொண்டுள்ளது. அவற்றை,

- உயிர் நேயம்
- உயிர்ப் பொதுமை
- இறைமையுணர்வு
- பல்லுயிர்ச் சூழலியம்
- இயற்கையுடனான புரிதல்

உள்ளிட்ட உட்தலைப்புகளின் வாயிலாக இக்கட்டுரை ஆய்ந்தறிகின்றது.

### உயிர் நேயம்

பளியர்கள் வேட்டைச் சமூகத்தினர். உணவுக்காக வேட்டையாடும் பளியர்கள் அடிப்படையில் கானகத்தோடு கானுயிர்களோடும் நேயம் கொண்டவர்களாகவே திகழ்கின்றனர். பளியர்கள் வாழும் காட்டில் அன்சாரி அத்தகைய உயிர் நேய உணர்வின் நீட்சியைப் புலியின் வேட்டையாடுதலுக்குப் பின் வெளிப்படுத்துகிறான். இதனை, அன்சாரிக்கு வருத்தமாய் இருந்தது. இறக்கும் புலியை இன்றுதான் முதல்தடவையாய் இவ்வளவு பக்கத்தில் பார்க்கிறான். வாழ்வின் அற்புதமான கணமொன்றில் இருப்பதாய் இருந்த சந்தோஷம் மறைந்தது. ஒரு தாயைக் கொன்றதன் மூலம் அதன் வளர்ச்சியடையாத குட்டியைத் தனிமைப் படுத்தி விட்டோமே என மனம் கலங்கச் செய்தது. முதல் தடவையாய் அதன் மீது கருணை சுரக்க அருகில் சென்று தொட்டுப் பார்க்கக் கைகளை நீட்டினான்.[2]

எனும் வரிகள் உணர்த்துகின்றன. வேட்டையாடும் சமூகத்துக்கு உயிர்கள் மீது கருணை இருக்காது எனும் பொதுபுத்தியை இப்புதினம் பல இடங்களில் கட்டுடைக்கின்றது. பசிக்காக வேட்டையாடும் பழங்குடிகள் பொழுது போக்கிற்காகவோ, சுயதேவைக்காகவோ உயிர்களை வேட்டையாடுவதில்லை எனும் அறக்கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தனர். புலியை பாட்டா என பெருமதிப்புடன் வணங்கும் பளியர்களின் நேயம் இப்புதினத்தில் இழையேபடுகின்றது.

### உயிர்ப் பொதுமை

மகாகவி பாரதியார் ஜடப்பொருட்களுக்கும் உயிருண்டு என எண்ணிய உயிர் நேயர். இச்சிந்தனை பளியர்களிடமும் காணப் பெற்றுள்ளது. உயிர்ப்பொதுமை எனும் கருத்தியல் தங்கப்பனின் தந்தை வழி உணர்த்தப்பெறுகின்றது. காட்டுக்கு உயிருண்டு, உணர்வுண்டு எனும் பொருள்படும்,

எல்லாக் காட்டுக்கும் ஒரு உடம்பு இருக்கு. மனுஷ உடம்புக்கு இருக்கிற எல்லா உறுப்பையும் மாதிரி அதுக்கும் உடலுறுப்பு இருக்கு. மனுஷனுக்குனு ஆதாரமா ஒரு உசுரு இருக்கிற மாதிரி அதுக்கும் ஒரு உசுரு இருக்கு... காட்டுக்குள்ள காலு வெச்சு நடக்கறப்போ எல்லாம் யாரோ ஒருத்தரோட ஓடம்புல காலவெச்சு நடக்கறோம்ங்கிற கவனத்தோட நட 3 (கானகன், பக்கம் 17)

எனும் வரிகள் அமைகின்றன. மேலும் காட்டுக்கும் காட்டு மரங்களுக்கும் உயிருண்டு எனும் நோக்கு பளியர்களிடம் காணப் பெறுகின்றது. இதனை,

*பளியன்களின் ஆன்மா மட்டுமில்லை. அந்தக் காட்டிலிருக்கும் அத்தனை உயிர்களின் ஆன்மாக்களும் மரங்களில்தான் காலா காலத்திற்கும் சேமிக்கப்படுகின்றன. ஆத்மாக்களுக்கு அழிவில்லை என்கிறபோது இந்த மரத்தை எப்படி அழித்து விட முடியும்? கட்டையன் சடையனோடு நின்று மரம் வெட்டுபவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்த மரம் ஒரு உயிரென்ற எந்தக் கருணையும் அவர்களின் கண்களில் இல்லை*[4]

எனும் வரிகள் உணர்த்துகின்றன. அறிவியல் தாவரங்களுக்கு உயிருண்டு என நிறுவுகின்றது. பொருளிலக்கணம் பகர்ந்த தொல்காப்பியரும் ஒன்றறிவதுவே உற்றறிவதுவே என தாவரங்களுக்கு ஒருயிர் என்றுரைக்கிறார். பளியர்கள் தமிழர்களின் மரபியல் கொள்கை நெறி நின்று மரங்களை மன்னுயிர்களுள் ஒன்றெனக் கருதி போற்றுகின்றனர்.

### இறைமையுணர்வு

பளியர்கள் இயற்கையைத் தெய்வமாகக் கருதும் தன்மை கொண்டவர்கள். குறிப்பாகக் காட்டைக் காப்பதற்காக வனமகள் பளிச்சி தான் பளியர்கள் எனும் இனத்தை மண்ணுக்கு அனுப்பியதாகக் கருதினார்கள். காட்டின் மரங்கள் மனிதர்களின் சுயநலனுக்காக வெட்டப்படும் போது பளியர்கள் மனம் கலங்கினர். இயற்கையை இறைமை என்று கருதும் பளியர்களின் நிலையை,

*பளிகன் இந்நதக் காட்டைக் காப்பதற்கென்றே காலம் காலமாய் பளிச்சியால் அனுப்பப்பட்டவன். வெட்டப்புடும் ஒவ்வொரு மரத்திலிருந்தும் வழியும் பளிச்சியின் குருதியையும் முலைப் பாலையும் வேதனையோடு பார்ப்பார்கள்.*[6]

எனும் வரிகள் காட்டுகின்றன.

### பல்லுயிர்ச் சூழலியம்

மண்ணும், இயற்கையும் அனைத்து உயிர்களுக்கும் உரித்தானது. அதனை மனிதன் தன்வயப்படுத்தி அதிகாரத்துவத்தை வெளிப்படுத்தும் போது பல்லுயிர்ச் சமநிலை பாதிப்படைகின்றது. கானுயிர்களுக்கு உரித்தான கானகத்தை மனிதன் தன் குடியிருப்புப் பகுதியாக மாற்றும்போது நீரும் உணவும் இன்றி கானுயிர்கள் பாதிப்படைகின்றன. அதன் பசி தீர்க்க குடியிருப்புப் பகுதிக்குள் உணவு தேடி அலையும் போது மனிதர்கள் தன்னைத் தற்காத்துக் கொள்ள அதனைத் தாக்க முயலுகிறார்கள். இருப்பிடத்தையும் இருப்பையும் நிலைநிறுத்துவதற்கான முயற்சி பல்லுயிர்ச் சூழலியத்தில் போராட்டத்தை ஏற்படுத்துகின்றது. இதனை யானைகளின் வாயிலாகக் கானகன் புதினம் எடுத்துக் காட்டுகின்றது.

*வாசிக்கு அந்த மிருகங்கள் ஏன் இத்தனை மூர்க்கமாய் நடந்து கொள்கின்றன என்பது புரியாமலே இருந்தது. மிருகங்கள் தேவையில்லாமல் வேட்டையாடும் வழக்கம் கொண்டவை அல்ல. அதுக்கு புல்லும் தண்ணியும் இருந்த எடத்த தானடா இவனுக வெட்டி மட்டப்படுத்தி கஞ்சாத் தோட்டமாக்கி இருக்காய்ங்க... காலங் காலமா அங்கேயே புல்லத்தின்னு பழக்கப்பட்டு, இந்த மாசத்துக்கு இந்த இடத்துக்குப் போனா இது இருக்கும்னு யானைக வருதுக.. வந்து பார்த்தா இங்க ஒன்னும் இருக்கதில்ல... கோவத்துல நாணப்புல்லத் தேடி மொத்தக் காட்டையும் சுத்துதுக... இந்த மிருகம் பூராம் பாவம்டா*[7]

எனும் வரிகள் காட்டில் மிருகங்களின் உரிமை பறிக்கப்பட்டதையும் மனிதர்களின் ஆதிக்கத்தையும் உணர்த்துகின்றன.

### இயற்கையுடனான புரிதல்

கானகத்தின் பழங்குடிகள் தொல் குடிகளாக அமைகின்றனர். நகர மக்களை விட இயற்கையுடனான புரிதல் பழங்குடிகளிடம் மேலோங்கிக் காணப்பெறுகின்றது. கானகத்தில் உண்டு உறங்கி வாழும்போது பெறும் அனுபவத்தின் வாயிலாக கானுயிர்களின் அசைவுகளையும் அதிர்வுகளையும் உணர்ந்திடும் வாய்ப்பு பழங்குடிகளிடம் காணப்பெறுகின்றது. பளியர்கள் கொண்டிருந்த இயற்கையுடனான புரிதல் வேட்டையாடும் அந்த இனக்குழுவின் சமூக மதிப்பாக அமைகின்றது. இதனை,

தவளை நாடு முழுக்கவே மிருகங்கள் பளிச்சியின் வாக்குக்குக் கட்டுப்பட்டவை. பளியன்களின் வயல்களுக்குள்ளோ அவர்களின் குடில்களுக்குள்ளோ ஒருநாளும் அவை அத்து மீறுவதில்லை. அதையும் மீறி அட்டகாசம் செய்யும் மிருகங்களை பளியன் தொந்தரவு செய்வதில்லை. ஒன்று அம்மிருகம் பெரும் பசியில் இருக்க வேண்டும். அல்லது கிறுக்குப் பிடித்துப் போனதாய் இருக்கவேண்டுமென மன்னித்து விடுவான். தன்னைத் தொந்தரவு செய்யாதவரை இந்த வனம் யாரையும் தொந்தரவு செய்வதில்லை. இங்கே புதிதாகக் குடியேறியவர்கள் எவ்வளவு வேகமாக முடியுமோ அவ்வளவு வேகமாக அந்தக் காட்டை அழிப்பதிலேயே குறியாய் இருந்ததால்தான் இந்த முறை காடும் முன்னெப்போதும் இல்லாத மூர்க்கத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது 8 எனும் வரிகள் உணர்த்துகின்றன.

## முடிவுரை

கானகன் புதினத்தில் பளியர்களின் சமூக மதிப்பு கதையினூடாக விரவிக் காணப் பெறுகின்றது. நகரமயமாதலால் காட்டிலிருந்தும் கானுயிர்களிலிருந்தும் பெருத்த இடைவெளி ஏற்பட்டுத் தனித்துப்போன மனிதர்களுக்கு கானகத்துக்குள்ளாகவே தொல்குடிகளாக வாழ்ந்து வரும் பளியர்களின் சமூகக் கட்டடைப்பு வியப்புக்குரியதாகவே இருக்கின்றது. பளியர்கள் இயற்கையுடனான இயைந்த வாழ்க்கையை வாழ்கின்றனர். வாழ்வியலின் அடிப்படைத் தேவைக்காக அன்றி காட்டிலிருந்து ஒரு சுள்ளியைக் கூட வீணாக நுகர்வதில்லை எனும் சுயக் கட்டுப்பாடு பளியர்களிடம் காணப் பெறுகின்றது. பளியர் சமூகத்துக்கான மதிப்புகள் பெரும்பாலும் இயற்கையை மையமிட்டே அமைகின்றது என்பது இவ்வாய்வின் வழி பெறப்பட்ட முடிவாகும்.

## குறிப்புகள்

1. லஷ்மி சரவணகுமார், கானகன், பக்கம் 358
2. மேலது, பக்கம் 16
3. மேலது, பக்கம் 17
4. மேலது, பக்கம் 17
5. மேலது, பக்கம் 68
6. மேலது, பக்கம் 44
7. மேலது, பக்கம் 147
8. மேலது, பக்கம் 153

## துணைநின்றவை

1. லஷ்மி சரவணகுமார், கானகன், எழுத்து பிரசுரம், சென்னை
2. சிவலிங்கனார். ஆ (ப.ஆ), தொல்காப்பியம் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை